# மனவெளி அரங்கம் “அணிகள் வேய் பிணங்கள்”

**வே.பாலகுமாரன்**

## காட்சி 1

டிசெம்பர் 1964ம் ஆண்டு. அப்போது பதவியிலிருந்த சிறீமாவின் அரசாங்கம் பெரும்பான்மை இழந்ததால் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத் தேர்தல் 1965 மார்ச்சில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்தவேளை, மலேசிய செல்வந்தர்- முன்னர் இலங்கையின் சொலிசிற்றர் ஜெனரலாக பதவி வகித்தவர்- இராணி அப்புக்காத்தர் ஆகிய முருகேசு திருச்செல்வத்தின் கொழும்பு இல்லம் மிகப் பரபரப்பாக இயங்கியது. ஏனெனில் இங்குதான் இன்னொரு ஏமாற்றுப் படலத்திற்கான முன்னுரை எழுதப் படலாயிற்று. தமிழர் ஆதரவை டட்லிக்கு அள்ளிக்கொடுத்து, அவர் அரசாங்கம் அமைக்க ஆதரவு வழங்குவதற்கான டட்லி - செல்வா பேச்சுக்களுக்கு **"கௌரவ தரகராக"** திருச்செல்வம் இயங்கினார். தொடர்ந்து ஏமாற்றப்பட்டதாலும் உடல் நோயாலும் சோர்வுற்றிருந்த தந்தை, இன்னொரு அரசியல் விபத்துக்குள் சிக்கவைக்கப்பட்டார். தமிழர் வரலாற்றிலேயே மிகக் குறைந்த சலுகைகளை வழங்கும் இரகசிய உடன்பாட்டிற்கு தந்தை சம்மதித்த போதும் இன்னொரு விபத்திலிருந்து தன்னை தவிர்த்துக் கொண்டார். தனக்கு டட்லி வழங்கிய அமைச்சர் பதவியை அவர் ஏற்கவில்லை. தரகுக் கூலியாக திருச்செல்வமே உள்ளூராட்சி அமைச்சராக மகிழ்வோடு பதவியேற்றார். இப்போது, தமிழர் சிலர் தரப்பிலே பெருமிதம், சிலாகிப்பு, மிதப்பு ஏனெனில் **"மூளைத்திறன்"** மிக்க தமிழன் அமைச்சராகி விட்டாரல்லவா? அத்தோடு இன்னொரு பெருமை, 1967-ம் ஆண்டு நடைபெற்ற ஐ.நா.வின் பொதுச்சபைக் கூட்டத்திற்கு சென்ற இலங்கை குழுவிற்கு தலைவராக அற்புதமாக ஆங்கிலம் பேசவல்ல **நுட்ப மூளைத்திறன்** கொண்ட நீ.தி. அல்லவா அனுப்பப்பட்டார். இதைவிட வேறென்ன பெருமை வேண்டும்? ஆனால் இவையெல்லாம் அதிக காலம் நீடிக்க சிங்களவர் விடவில்லை. வரலாற்றின் முன்னைய கசப்பான பாடங்கள் மீண்டும் தமிழன் மனவெளி அரங்கிலே அரங்கேறின. டட்லி செல்வா உடன்பாடு காற்றிலே கலந்த கனவாக திருச்செல்வத்திற்கு துணை அமைச்சராகவிருந்த பிரேமதாசாவே உண்மையான அமைச்சராக செயற்பட திருக்கோணேசுவரப் பகுதியை புனிதத் தலமாக பிரகடனப் படுத்த முற்பட்ட வேளை டட்லி காலை வாரிவிட வேறு வழியின்றி அமைச்சர் திருச்செல்வம் வெறும் திருச்செல்வமாக மாற தமிழரசுக் கட்சியும் ஆதரவை விலக்கியது.

இவை நடந்தது 1969ம் ஆண்டில். இதனால் டட்லிக்கு ஒன்றும் குடிமுழுகிப் போய் விடவில்லை. ஏனெனில் **தேர்தல் நடத்த வேண்டிய காலமும் நெருங்கிவிட்டது.** எனவே இதனையொரு அரசியல் தந்திரோபாயமாக தமிழரசுக் கட்சி அன்று நினைத்திருக்கக் கூடும். ஆனால் இங்குள்ள அவலம் என்னவென்றால், தமிழரசுக் கட்சியும் முருகேசு திருச்செல்வமும் இவ்வாறு தப்புத்தாளம் போடுகையில் சிங்களத்தாரின் பிதாமகன், அவர்களது "மெயின் காம்ப்பை" எழுதிய அனாகரிக தருமபாலர் மீண்டும் உயிர்ப்பிக்க வைக்கப்பட்டார். சிங்களவர் மனவுலகிலே அவர் கதாநாயகனாக்கப்பட்டார். 'இந்த நாடு சிங்கள மக்களுக்குரியது அல்ல **சிங்கள பௌத்த மக்களுக்கே உரியது**" என்கிற அவரின் அதிசயமான கருத்தை "புராதன வரலாற்றுச் சிறப்பு மிக்க இனமொன்றின் இனிமையான, பெருந்தன்மையான, ஆரிய புத்திரர்களின் நிலங்களை, தேவாலயங்களை ஏன் அவர்களேயே அழிக்குமளவிற்கு சென்ற தமிழர்களிடமிருந்து சிங்களவரை பாதுகாக்க வேண்டும்" என்கிற தத்துவத்தை சிங்களவர் மீண்டும் அசைபோட வைக்கப்பட்டு, இந்த ஆரிய மாயை அரசோச்சுவோரின் வேதமாகியது.

ஆனால் எம்மவரோ இவை பதவிகளைக் கெடுக்காமல் தத்தம் **"மூளைத்திறன் அபிவிருத்தி"** பற்றியே சிந்தித்திருந்தனர்.



## காட்சி 2

30 ஆண்டுகள் கழிந்துவிட்டன. 1994ம் ஆண்டின் நடுக்கூறு. இப்போது இன்னொரு திருச்செல்வத்தின் கொழும்பு இல்லம் பெரும் பரபரப்புக்குள்ளாகிக் கொண்டிருந்தது. கலாநிதி நீலன் திருச்செல்வம் உலக அரசியல் யாப்புக்களை கரைத்துக் குடித்தவர் - உலகப் புகழ்பெற்ற சட்ட நிபுணர் - மனித உரிமைகள் பற்றி முழு உலகிற்குமே விரிவுரையாற்றுபவர். - பல்வேறு ஆய்வு நிறுவனங்களின் ஆய்வாளர். இவற்றோடு இன்னொரு ஆய்வு வேலையையும் அவர் செய்யத்தொடங்கினார். சந்திரிகாவுக்கு தமிழ்ச்சாயம் பூசத் தொடங்கினார். அம்மையாரின் தனி ஆலோசகரானார். வழமையான தமிழ் தலைமைகட்கு வழியில்லாது செய்து விட்ட புலிகளை கையாள்வது எப்படியென்கிற ஆய்வை சந்திரிகாவிடம் சமர்ப்பித்து இரண்டாவது கலாநிதி பட்டத்தையும் பெற்றுக் கொண்டார். தந்தையின் பாதையிலே **"கௌரவதரகராகி"** தமிழர் விடுதலைக் கூட்டணியை சந்திரிகாவின் கூட்டணிக்கு கூட்டுச் சேர்த்தார். இன்னொரு **ஒக்ஸ்போட் பல்கலைக்கழக கலாநிதியும்** 25 வருடமாக கொழும்பு பல்கலைக் கழக பேராசிரியராக பின் துணை வேந்தராக இருந்த பீரிசை துணைகொண்டு [illegible] கருக்குப்போட அரசியற் பொதியென்றும் பாசக்கயிறென்றும் தயாரித்தார். இவை எல்லாவற்றையும் விட இன்னொரு காரியமும் செய்தார். தனக்கு வழங்கப்படக்கூடிய அமைச்சர் பதவியை தன் தந்தை போலல்லாது தனக்கேற்றவாறு இன்னொருவருக்கு தாரை வார்த்தார். இவ்வாறாக இன்னொரு தமிழ் மூளை அரசியல் உலகிற்கு அறிமுகமானது. எப்படிப்பட்ட அறிவாளர் இந்தப் புதுமுகம் லக்ஸ்மன் கதிர்காமர்? அவரின் பட்டங்களின், பதவிகளின் பட்டியலைப் பாருங்கள். சனாதிபதிச் சட்டத்தரணி, தொழிற்பிணக்குகள், சர்வதேச சட்டங்கள், Intellectual Property Rights எனப்படும் அறிவாளர் புலமையுரிமை போன்றவற்றில் இலங்கையில் தலைசிறந்த சட்டவாளர், ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தில் பாரிஸ்டர் பட்டம் பெற்றவர், ஒக்ஸ்போர்ட் சங்கத்தலைவராக இருந்தவர், பிரிவிகவுன்சில் எனப்படும் கோமன்வெல்த்தின் பொதுநலவாய நாடுகள் சார்பில் வழக்குரைக்கும் தகுதி பெற்ற ஒரே இலங்கையர், ஐ.நா.வின் சர்வதேச தொழில் தாபனத்தின் ஆலோசகராகவிருந்தவர், W.I.P.O எனப்படும் சர்வதேச அறிவாளர் புலமையுரிமை அமைப்பின் பணிப்பாளராகவிருந்தவர், ஆசிய பசுபிக் நாடுகளின் அரசாங்கங்களுக்கு இவ்விடயத்தில் ஆலோசகர், இவ்வாறாக இப்பட்டியல் மேலும் நீளும். இவற்றோடு அவரது ஒக்ஸ்போர்ட் தரத்திலான ஆழமான ஆங்கிலப் புலமை மேட்டுக்குடிப் பாங்கிலான இலாவகமான பழக்கவழக்கங்கள், பேச்சுவன்மை - இது வரை எந்தவொரு தமிழனும் கொண்டிராத தகுதிகளோடு சந்திரிகா அமைச்சரவையில் சேர்ந்த கதிர்காமர் இதுவரை என்னசெய்தார்? தனது முழு அறிவையும் எதற்காகப் பயன்படுத்தினார்? எதனைச் சாதித்தார்?

இப்படிப்பட்ட புலமையுடைய கதிர்காமர் அடக்குமுறையாளருக்கு எதிராக குருதி சிந்தி குற்றுயிரும் குலையுயிருமாக போராடும் தனது மக்களுக்கு எதிராக தனது அறிவை அடகுவைத்து இழிவான இராச தந்திர பரப்புரையை வெகு இலாவகமாக மேற்கொண்டார். சிங்களவரே திகைத்துப்போனார்கள். தம்மில் எவரால் கூட இவ்வாறு விடுதலைப் போராட்டமொன்றை விழலுக்கு இறைத்த நீராக வருணிக்க முடியாது என்றுரைத்தார்கள். பொன். இராமநாதனுக்குப் பின் கதிர்காமர் என தலையில் வைத்துக் கூத்தாடினார்கள். சென்ற இடமெல்லாம் இந்தியா தொட்டு மேற்கு ஐரோப்பிய நாடுகள், கனடா, இங்கிலாந்து, அமெரிக்கா எங்கும் வெற்றிக் கொடி நாட்டி - புலிக்கொடி இறக்கப்படும் நாள் விரைவில் என கூறுரைத்தார். கதிர்காமரில் சிங்கள அமைச்சர்களுக்கு இலேசாக பொறாமைகூட ஏற்பட்டதாம். **நீலன் பின் நிற்க, கதிர்காமர் முன்நிற்க, பீரிஸ் பக்கம் செல்ல, சந்திரிகா வெற்றிக்கம்பம் நோக்கிச் செல்லும் வீராங்கனையானார்.** எதற்கும் கதிர்காமர் பற்றியே பேச்சு. இந்தியா புலிகளுக்குத் தடை, அமெரிக்கா பயங்கரவாதிப்பட்டம், மேற்கு ஐரோப்பிய நாடுகளில் நிதி சேகரிப்பு வறட்சி, இங்கிலாந்தில் விரைவில் தடை, எங்கும் கதவடைப்பு என விரப்பிரதாபங்கள் - உலக புலியொழிப்பு நாயகனாக பவனி வந்தார் கதிர்காமர். செருக்கு தலைக்கேறியது பேச்சில் ஆணவம் தொனித்தது.



## காட்சி 3

1998ம் ஆண்டின் இறுதிக் கூறு. உலகத்திலிருந்த பயங்கரவாதிகளை அழிப்பதற்கே அவதாரம் எடுத்தாற்போல பொங்கியெழுந்த கதிர்காமருக்கு இப்போது என்ன நடந்[illegible] வெளிநாட்டில் கதிர்காமரும் புலிகள் தொலைந்தார்கள் என்றவர்கள் தம் கண் முன்னே இருவரும் தலைகுப்புற கவிழ்வதை திகைப்போடு பார்த்து நிற்கின்றார்கள். தான் ஒரு மிகக் கேவலமான - கோமாளித்தனமான ஒரு பகடையாக பயன்பட்டதை கதிர்காமர் உணரும் காலம் நெருங்கிவிட்டது. இதுவரை கதிர்காமர் அடித்த தம்பட்டங்களின் விளைவாக சர்வதேசத்தில் புலிகளின் செயற்பாடுகள், நிதி சேகரிப்புக்கள், **இராணுவ வலிமை எவ்வளவு தூரம் குறைக்கப்பட்டது?** நாடாளுமன்றிலே கதிர்காமருக்கு சவால் விடப்படுகின்றது. **"விண்ணாணம் பேசி வார்த்தைஜாலம் பண்ணாமல்"** நேரடியாக பதில் சொல் என குத்தலாக கேள்விகள் எழுகின்றன. தலைக்கனம் மிக்க செயற்பாடுகள் அவரது இராசதந்திர சறுக்கல்கள் எல்லாமே அவரது பட்டங்களின் பட்டியலை விட மிக நீண்டவையாகி விட்டன.

[illegible] "தக்க முறையில்" கவனிப்போம். அவர் ஒரு பெரும் புள்ளியென [illegible] கதிர்காமர் கதையளந்ததோடு தொடங்கிய அவரது வீழ்ச்சி, இப்போது தென்னாபிரிக்காவில் இராச தந்திர சவாரி செய்து [illegible] பூனையும் பிடிக்காமல் திரும்பியதோடு முற்றுப் பெறுகின்றது. நாம் கேட்கவில்லை, நாடாளுமன்றிலே அனுரா கேட்கிறார். "எமது நாட்டின் வெளிநாட்டு அமைச்சு என்ன தனி பொருளின் கொத்தடிமையாக் கொத்தா" என முழக்கமிட்ட அனுரா. அமெரிக்காவில் என்ன நடக்கின்றது? புலி அமைப்பாளரும் சட்ட ஆலோசகரும், அமெரிக்காவில் புலிகள் செயற்பாட்டுப் பொறுப்பாளரும் என்ன காணாமலா போய் விட்டார்கள்? வழமையாக அவர்கள் அங்கு செயற்படுகின்றார்களே என்கிறார் தராக்கி. கேட்கிறார் - பிரித்தானியாவிலிருந்து புலிகள் தமது செயலகத்தை தென்னாபிரிக்கா மாற்றப் போவதாக எவர் கதைகட்டி விட்டார்கள்? காதரின் வீதியில் சூழும் இல்லம் வழமையாக இயங்குகின்றதே. தென்னாபிரிக்காவில் தமிழர் ஆதரவான அமைப்பு மிகச்சிறப்பாக மாவீரர் நினைவு தினத்தை கொண்டாடியதை கதிர்காமர் அறிவாரா? ஆபிரிக்க தேசியக் காங்கிரசுக்கும் தமிழ் போராளிகட்குமுள்ள உறவு பற்றி இவர்களுக்கு என்ன தெரியும்? எவ்வகையில் கதிர்காமரின் தென்னாபிரிக்கப் பயணம் புலிகளின் இராணுவ, நிதி வலிமையினை குறைக்க உதவியது என்பதை இந்நாட்டு மக்களுக்கு விளக்க கதிர்காமர் முன்வருவாரா எனக் கேள்வி எழுப்புகின்றார் தராக்கி.

இன்று எம் மக்கள் மனவெளி அரங்கிலே தலைகுனிந்து குற்றவாளியாக நிற்கிறார் கதிர்காமர். சந்திரிகா அம்மையாரோடு எமக்கு ஏது உறவு என நீலனும், கூட்டணியும் கைவிரித்தவாறு நாடகமாடுகையில் - கதிர்காமர் இந்த நாடகத்தில் தன்னும் பங்கு பற்ற முடியாது பொறிக்குள் சிக்கி நிற்கின்றார். நுட்ப மூளைத்திறன் கொண்ட இவர்களுக்கு என்ன புரியவில்லை? விரைவில் கழிவிரக்கத்தால் கலங்கப்போகும் கதிர்காமர் பாரதியாரைத்தன்னும் படித்திருந்தால் இந்நிலை ஏற்பட்டிருக்குமா? "நின்னருள் (சுதந்திரதேவியின்) [illegible]

**பண்ணரும் கல்வி கேள்வி**
**படைத்துயர்ந்திட்டாரேனும்**
**பின்னரும் எண்ணிலாத**
**பெரும்பொருள் சிறந்தாரேனும்**
**அன்னவர் வாழ்க்கை பாழாம்**
**அணிகள் வேய் பிணத்தோடொப்பர்"**

அல்லது கதிர்காமர் போல் மெத்தப் படிக்காவிட்டாலும், "சந்ததிக்காய் சாவதற்கு தயக்கம் ஒன்றும் எமக்கில்லை வரலாறு என்றும் எம்மை வாழவைக்கும்"........

என மாங்குளம் ஜெயசிக்குறுய் எதிர் நடவடிக்கை கட்டளைப் பணியகத்திலிருந்து வெளியாகும் "சுதந்திரக்காற்று" ஏட்டில் பாடிய செந்தமிழன் மனநிலையைத் தன்னும் கதிர்காமர் அறிவாரா? அப்படியானால் இது வரை எதை அறிந்தார் கதிர்காமர்?

*நன்றி விடுதலைப் புலிகள்*




சென்ற இதழ் தொடர்ச்சி

## குடித்தொகைப் பரம்பல்

சன நெருக்கடி கூடிய நகரப் பகுதிகளிலும், அதனை அண்டியபகுதிகளிலும் வாழும் மக்களில் ஒரு பகுதியினர் சில தேவைகளின் காரணமாக வேறு இடங்களுக்கு குடிபெயர்ந்து சென்று அங்கு தொழில் முயற்சிகளை மேற்கொள்வது குடித்தொகைப் பரம்பல் எனக் குறிப்பிடலாம். அண்மைக் காலங்களில் தமிழீழப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட சிங்களக் குடியேற்றங்கள் இன்று தொழில் முயற்சிகளை அடிப்படையாகக் கொண்ட போதிலும், அவை நிலத்தை ஆக்கிரமிக்கும் முயற்சியாகவே மேற்கொள்ளப்பட்டன. இந்த வகையில் மணலாறு, கென்ற் பொலர்பாம், நாயாறு, கந்தளாய், சேருவில போன்ற சிங்களக் குடியேற்றங்கள் விஸ்தரிக்கப்பட்டன.

இத்தகைய இடங்களில் விவசாய உற்பத்தி, கடற்தொழில் அபிவிருத்தி என்பவற்றிற்காக சிங்களவர்களை குடியேற்றும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் வன்னிப் பெருநிலப் பரப்பில் பெருமளவு விவசாய நிலங்கள் கவனிப்பாரற்றுக் கிடக்கின்றன. சில குறித்த நகரப் பகுதிகளில் செறிவாக வாழ்பவர்கள் இத்தகைய இடங்களை நாடிச் சென்று குடிப்பெயர்வை ஏற்படுத்துவதன் மூலம் தமது உணவுத் தேவைகளை பெறுவதுடன், பொருளாதார விருத்திகளையும் அதிகரிக்கலாம். இதனால் உணவுப் பொருட்களின் விலையேற்றம், நோய்களின் தாக்கம், வறுமை, இட நெருக்கடிகள் என்பவற்றை பெருமளவு குறைக்கலாம்.

**தமிழீழம் ந.அனந்தராஜ்**

## சுற்றாடல் பாதுகாப்பு

நகரப் புறங்களில் கைத்தொழில்களின் உற்பத்தி, வாகனப் போக்குவரத்துக்கள், இரைச்சல் தொழிற்சாலைகள், காடுகள் அழிக்கப்பட்டமை போன்றவற்றில் தூசிகள், புகைகள், இரசாயனப் பொருட்கள் கலந்த வாயுக்கள், கழிவு நீர் நிலைகளில் சேர்தல் போன்றவையும் சுற்றாடலை மாசடைய செய்கின்றன. ஆனால்



ஒரு விவசாய சூழலில் இத்தகைய தாக்கங்களைக் காணமுடியாது விவசாய சூழலில் காணப்படும் தாவரங்கள், மற்றும் காடுகள் வளியைத் தூய்மையாக்குவதுடன், சூழல் சமநிலையையும் பேண உதவுகின்றன. மேலும் விவசாய உற்பத்திகளின் கழிவுகள் மீளப் பயன்படுத்தப்படுகின்றன. உதாரணமாக வைக்கோல் பசளையாகவோ, கால்நடை உணவாகவோ பயன்படுத்தப்படுவதுடன் கடதாசி உற்பத்திக்கு மூலப் பொருளாகவும் பயன்படுத்தப்படுகின்றது விலங்குக் கழிவுகள் பசளையாகவோ எரிபொருளாகவோ பயன்படுகின்றன.

எனவே எமது சுற்றாடல் பாதுகாப்பானது, விவசாய உற்பத்தித் திட்டங்களின் மூலம் பேணப்படுகிறது.

## சுயதொழில் வாய்ப்புக்கள்

விவசாய தொழில் முயற்சிகள் மிகக் குறைந்த மூலதனத்துடனும் மூல வளங்களுடனும் ஆரம்பிக்கக் கூடியவை ஆனால் மனித உழைப்பு என்பது இதில் மிகக் கூடிய பங்களிப்பை செய்யும். எனவே எமது நாட்டில் வருடா வருடம் அதிகரித்துவரும் வேலையில்லாப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குரிய ஒரே ஒரு எளிமையான எவருக்கும் தலைவணங்காத வழி சுய வேலை வாய்ப்புத் திட்டங்களை அறிமுகப்படுத்துவதே ஆகும். இது ஆக்கபூர்வமான பயனுள்ள செயல்பாடு. இதற்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் வேண்டிய உதவிகளையும் ஆலோசனைகளையும் வழங்கி வருகின்றது.

இன்று வன்னிப் பெருநிலப்பரப்பில் வாழும் நிரந்தர, இடம் பெயர்ந்த மக்களுக்கான சுய வேலை வாய்ப்புத் திட்டங்களை கால்நடைப் பராமரிப்பின் மூலமாக அறிமுகம் செய்யலாம். எமது பிரதேசத்தில் இலகுவாக மேற்கொள்ளக்கூடிய சிலசெயல் திட்டங்களாக, கோழி வளர்ப்பு - ஆடு வளர்ப்பு - பசுமாடு வளர்ப்பு - தேனீ வளர்ப்பு - பன்றி வளர்ப்பு - முயல் வளர்ப்பு - என்பவற்றை ஊக்குவிப்பதன் மூலம் நாட்டின் தேசிய வருமானத்தை உயர்த்துவதுடன் சுய வேலை வாய்ப்பையும் ஏற்படுத்திக் கொள்ளலாம். இவற்றைவிட நாற்று மேடை தயாரித்து நாற்றுக்களை விற்பனை செய்வதும் இலாபகரமான தொழிலாகும்.

எனவே இன்று சீரழிக்கப்பட்ட எமது சுய பொருளாதாரத்தைக் கட்டி எழுப்புவதற்கு விவசாயத்துறையை மேம் படுத்துவது இன்றியமையாததாகும்.

✧✧✧




பொருளாதார தடைகண்டு
பொசுங்கிப் போவோமா
உற்பத்தி முயற்சிகள்
உரமுடன் எழுந்தன
கைத் தொழில் சிறந்தது
கடற்றொழில் வளர்ந்தது
பயிரது வளர்ந்திட
அமுதொன்றும்
கிடைத்தது.
அன்னாசி, கோப்பியோடு
கொக்கோவுமிங்கு
விளைந்தன
இன்னும் அடைப்பொறி
கன்னில்
கோழிக்குஞ்சுகள்
பொரிக்கும் விந்தையும்
இங்கே நிகழ்ந்தது .

எங்கள் தமிழீழம் எத்தனை
அழகு
வளப்போடு வளம் நிறைந்தது.
நிலக்கடல் சூழ்ந்த
நீண்ட நிலப்பரப்பு
மீனொடு முத்தும்
கரைதனில் உப்பும்
கனிப்பொருள் பலவும்
தானாக விளைவது
பச்சை வயலோடு
அடவி சூழ் திருநாடு
தேனோடு பாலும்
நெல்மணிப் பொன்னும்
சீராகப் பொங்கி வழியுது
ஏற்றுமதி செய்தும்
நிறைந்திருந்த நாடு
பஞ்சமென்று அஞ்சி
மாற்றானை மண்டியிடுமா?
மானமே பெரிதென்ற
மறத்தமிழர் மரபு வழி நாங்கள்

எங்கள் தமிழீழம்
வளங்கொளித் தழகுடன்
மிளிருது....
கண்ணில் தெரியுதெங்கள்
எதிர்காலம் பசுமையாய்
நிச்சயம் தமிழீழம்
நிறைவான நாடாகும்
உச்சமாய் நாளை
புதிய கண்டுபிடிப்புக்கள்
இன்னும் இங்கு எழும்
அன்றவற்றைக் கண்டு வியந்து
பார்க்கப் படிக்கவென
உலகமே இங்குவரும்
எங்கள் தமிழீழம்
வளப்புடன் வளமும்
நிகரில்லா வலிமையும்
தன்னகத்தே கொண்டது

**தூயவள்**






(தொடர்ச்சி 15-ம் பக்கம்)

# கருத்து மாற்றமும் அதன் அவசியமும்



**- கே.பி.றெஜி -**

நாங்கள் போராடிக் கொண்டிருக்கின்ற ஒரு சமூகம். ஓர் இலக்கை அடைவதற்காக தமிழர்கள் தங்கள் வாழ்வை, வாழ்வு ஆதாரங்களை தியாகம் செய்து கொண்டிருக்கின்றார்கள். சுதந்திரம் என்ற இலக்கினை வரித்து அதற்காக எவைஎவை இழக்கப்பட வேண்டுமோ அவை அனைத்தையும் இழந்துகொண்டு எமது போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. சுதந்திரம் என்பது தென் ஆபிரிக்க அதிபர் நெல்சன் மண்டேலா அவர்கள் கூறியது போன்று சுதந்திரத்திற்காக நாங்கள் அனுபவித்துக் கொண்டிருக்கின்ற சகல வகையான விளைவுகளையுமே குறித்து நிற்கின்றது இங்கு குறிப்படப்போவது அத்தகைய விளைவுகளை எதிர் கொள்கின்ற மாற்றத்தையே சார்ந்து நிற்கின்றது. தமிழனாகப் பிறந்த ஒவ்வொருவரினதும் அடிமனதில் சுதந்திரமான ஓர் நாடு வேண்டும் என்ற எண்ணம் ஆழமாகப் பதிந்துள்ளது. இதுவே இன்னமும் இந்த மண்ணைப் பற்றிப் பிடித்துக்கொண்டு வாழ்கின்ற மக்களின் நம்பிக்கை மூலக்கருவாக இருப்பதால் இங்கே தொடர்ந்தும் வாழ்கின்றனர். இது ஒரு கொள்கை மாற்றமாகும்.

கொள்கை மாற்றம் என்பது பல வடிவங்களில் உள்ளது. ஒரு குழுமத்தில் அல்லது சமுதாயத்தில் ஏற்படும் கொள்கை மாற்றம் அந்த நாட்டின் அரசியல், பொருளாதார, கலை,பண்பாடு, போன்றவற்றில் மாற்றங்களை ஏற்படுத்த வல்லது. இத்தகைய மாற்றங்களானது சுயமாக ஏற்படுவது இல்லை என்றே கூற வேண்டும். உலக நாடுகளின் வரலாறுகளை நோக்கும் போது, ஒவ்வொரு கொள்கை மாற்றங்களும் இயல்பு நிலைக்கு எதிராக அல்லது அதனைப் பாதிக்கும் அசாதாரண நிலை வரும் போது தான் அவை ஏற்படுகின்றன. ஈழத் தமிழர்களாகிய எங்களுக்கும் அவ்வாறானதோர் நிலை தான் ஏற்பட்டது.

அதாவது 1956ல் சிங்களத்தை அரசகரும மொழியாக்க வேண்டும் என்ற தீர்மானம் கொண்டு வருவதற்கு முன்பே, தந்தை செல்வாவினால் எச்சரிக்கையாகவும் பல உணர்வோடும் ஒரு கருத்துக் கூறப்பட்டது. சிறு பான்மையினருக்கு ஏதோ நடக்கப்போகின்றது அது அவர்களின் இயல்பு வாழ்வைப் பாதிக்கக்கூடும் அவ்வாறான செயற்பாடுகளைக் கவனத்தில் கொள்ளவேண்டும் என்பதே அந்தக் கருத்தாகும். எனினும் 'சிங்களம்மட்டும்' சட்டம் நிறைவேற்றப்பட்டது. இதன் பின்பு நடந்த சிங்கள ஆட்சியாளரின் நடவடிக்கைகள் தமிழர்களின் இயல்பு நிலையை பாதித்தது.

1974 ஜனவரி 10ம் திகதி தமிழர்கள் தமது இன, மொழி, பண்பாடு போன்றவை பற்றிக் கதைக்கவோ அல்லது ஆய்வு செய்யவோ, அவற்றை வளர்க்கவோ முடியாது என்ற சட்டம் கொண்டு வரப்படவில்லை; ஆனால் அமுலாக்கப்பட்டது.

அதாவது 1974 ஜனவரியில் யாழ் நகரில் நடந்த தமிழாராச்சி மாநாட்டில் விளைவிக்கப்பட்ட வன்முறைப் பிரயோகம் தமிழர் வாழ்வுக்கும் தமிழ் மொழி வளர்ச்சிக்கும் தமிழ் பண்பாட்டுக்கும் ஏற்படுத்தப்பட்ட பெரும் அச்சுறுத்தலே. சிங்களக் குண்டர்களின் குண்டுகள் தமிழர் உடலில் ஈவிரக்கமின்றிப் பாய்ந்தன. ஒன்பது தமிழர்கள் பலியாயினர். இது தமிழர் வாழ்வின் இயல்பையும் வளர்ச்சியையும் பாதித்த நிகழ்வும் செயலுமே.

இவ்வாறான பல சம்பவங்கள் தமிழர்களின் இயல்பு நிலையினை சீர் குலைக்கச் செய்தது. எனவே அவர்கள் புதிய கொள்கை ஒன்றை ஏற்றுக்கொள்வதற்கு தமக்குள் ஓர் இடத்தினை ஏற்படுத்திக் கொண்டனர். அதாவது சேர்ந்து வாழ்தல் என்ற கொள்கையுடன் தமது வாழ்க்கையை அமைத்த மக்கள் அதற்கு பதிப்பு ஏற்பட பாதுகாப்பு இல்லாத போக பிரிந்து வாழ்தல் என்ற கொள்கைக்கு இணங்கினர்.

## கொள்கை மாற்றமும் கருத்து மாற்றமும்

கொள்கை மாற்றம் என்பது பொதுவாகவும் கருத்து மாற்றம் என்பது குறிப்பாகவும் காணப்படுகின்றது. அதாவது கொள்கை மாற்றத்தின் செயல்வடிவம் உருவாக வேண்டுமானின் அல்லது செயல்வடிவம் பூர்த்தியாக்கப்பட வேண்டுமானின், அதில் பங்கு பற்றுகின்ற ஒவ்வொருவரினது கருத்திலும் மாற்றம் ஏற்பட வேண்டும். அதாவது ஒவ்வொரு மனிதனதும் ஒத்த கருத்து மாற்றமே கொள்கை மாற்றத்துக்கு செயல் வடிவம் கொடுக்கும். இவ்வாறு ஒவ்வொரு கொள்கை மாற்றங்களும் நிலைத்து நிற்பதற்கு ஒவ்வொருவரினதும் கருத்து மாற்றம் அவசியமானதாகின்றது.

கிழமையில் மக்கள் ஒரே கொள்கைக்குள் வாழ்கின்றார்கள் எனில் அதில் பங்கு பற்றுகின்ற சகல அங்கத்தவரிடமும் கருத்துமாற்றமானது ஏற்பட்டு இருக்கின்றது என்பதே அர்த்தமாகும் ரசியாவில் முன்னைய சோவியத் யூனியன் என்ற கொள்கை உடைந்ததற்கு காரணம் அங்கு வாழும் மக்கள் கூட்டத்தில் ஏற்பட்ட அல்லது ஏற்படுத்தப்பட்ட கருத்து மாற்றமாகும்.

எமது நாட்டிலும் கொள்கை மாற்றம் ஏற்பட்டு விட்டது. ஆனால் ஒவ்வொரு தமிழரிடமும் கருத்து மாற்றம் முழுமையாக ஏற்படவில்லை என்றே கூறவேண்டும். எமது போராட்டம் நீண்டு கொண்டு



செல்வதற்கு இதுவே மூலமாக இருக்கின்றது.

## கருத்து மாற்றம்

கருத்து மாற்றம் என்பது ஒன்றை ஏற்றுக் கொள்வதோ அல்லது அதற்கு ஆதரவளிப்பதோடு மட்டும் நின்று விடுவது எல்லோரும் இதைத்தான் கருத்து மாற்றம் என்று நினைக்கின்றார்கள். கருத்து மாற்றம் என்பது ஏற்றுக்கொள்வதோ அல்லது ஆதரவளிப்பதோடு நின்று விடாமல் எந்த இலக்கிற்காக கருத்து மாற்றம் ஏற்படுகின்றதோ அதனை அடைவதற்கான செயற்பாட்டில் பங்கு பற்றுவதும் அதனால் எழுகின்ற விளைவுகளை எதிர் கொள்வதும் உள்ளடங்கும். இதன் பின்பே கருத்து மாற்றமானது முழுமை பெறுகின்றது.

எமது போராட்டத்தினை பொறுத்த வரை கருத்து மாற்றம் என்பது முழுமையானதாக இருக்க வேண்டும். அனைவரும் கருத்தினை ஏற்றுக் கொள்கின்றனர். அனைவரும் கருத்தினை ஆதரிக்கின்றனர் என்பதற்றால் எமது இலக்கின் முடிவினை அடைந்து விட முடியாது.

ஏனெனில் ஒருவர் கருத்தினை ஏற்றுக் கொள்ளலாம் ஆனால் அவர் வேறொரு கருத்துலகத்துள் வாழ்ந்து கொண்டிருக்கலாம்.

ஒருவர் ஒரு கருத்திற்கு ஆதரவழிக்கலாம். ஆனால் அவர் வேறொரு கருத்தையும் ஆதரிக்கலாம்.

மேற்கூறிய இரண்டு வகையினாலும் முழுமையான பயன் கருத்து மாற்றத்திற்கு கிடைக்காது என்பதே தெளிவு. இவ்வாறான நிகழ்வுதான் தமிழர்களாகிய எமக்குள் இருந்து வருகின்றது. இவை அரசியல் நடவடிக்கைகளுக்காகவும் ஆட்சி நலன்களுக்காகவும் முந்தைய அரசியலாளர்களால் தவறாக ஒழுங்குபடுத்தப்பட்ட [Mal organising] முறைகளாகும்.

கருத்து மாற்றம் ஏற்பட்ட சமூகத்தினருக்கு அவர்களின் வேண்டுதல்களுக்கும் நோக்கங்களுக்கும் ஏற்ப செயற்பாடுகள் சீர்செய்யப்படவில்லை. இது அரசியல்வாதிகளின் ஆட்சி நலன்களுக்கு ஏற்ப தவறாக சீர் செய்யப்பட்டது (Mal adjustment). 1977ம் ஆண்டு தேர்தலின் பின் அதன் நோக்கம் நிறைவேறப்படாமை குறிப்பிடத்தக்கது.

தற்போதைய தமிழ் சமூகத்தினரின் கருத்து மாற்றம் என்பதன் யதார்த்தம் என்னவெனில் ஒவ்வொருவரிடமும் இருக்கின்ற கருத்துக்களில் அல்லது ஒவ்வொருவரும் வாழ்கின்ற கருத்துலகத்துள் இருந்து சுதந்திர தேடலான கருத்து மாற்றத்திற்கு ஒத்துழைக்க கருத்துக்களை இருக்கவேண்டும் என்பதே.

மிகுதி அடுத்த இதழில்

# மேதினம்-1999

## மேதின ஊர்வலம் - ஒஸ்லோ



Oslo, Bergen, Stavanger, Trondheim, Narvic ஆகிய 5 நகரங்களில் மேதின ஊர்வலம் நடைபெற்றுள்ளது. Oslo-இல் நடைபெற்ற ஊர்வலத்தில் 4000க்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டனர்.

ஈழத்தமிழர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் பதாகைகளின் கீழ் பல நூற்றுப்பேராய் அணிதிரண்டு ஊர்வலத்தில் பங்கெடுத்துக் கொண்டனர். அதிலும் குறிப்பாக தலைநகர் ஒஸ்லோவில் நடைபெற்ற ஊர்வலத்தில் பெண்கள் குழந்தைகள் உட்பட நூறுக்கும் மேற்பட்ட மக்கள் பங்குகொண்டனர். நோர்வே தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் ஒழுங்கமைப்பின் கீழ் தமிழீழ விடுதலைப் புலிகளின் பதாகைகளின் கீழ் அணிதிரண்ட தமிழ் மக்கள் தமிழர்களின் சுய நிர்ணய உரிமையை அங்கீகரிக்கக் கோரியும் பொருளாதார உதவி என்ற பெயரில் சிறீலங்கா அரசின் இனப் போருக்கான ஆயுதக் கொள்வனவுக்கு உதவுவதை நிறுத்தக் கோரியும் நோர்வேயில் அரசியல் தஞ்சம் புகுந்திருக்கும் ஈழத்தமிழர்களை திருப்பி அனுப்புவதை நிறுத்தக் கோரியும் [illegible] அட்டைகளைத் தாங்கிச் சென்றனர். இவ் ஊர்வலத்தில் [illegible] கொடியும் எடுத்துச் செல்லப்பட்டது. இவ் ஊர்வலத்தில் கலந்துகொண்ட மக்கள் தமது ஊர்வல நோக்கத்தினை நேர்த்தியாகவும் எளிமையாகவும் காட்சிப்படுத்தியிருந்தது ஊர்வலத்தினைப் பார்வையிட்ட அனைவரது கருத்தையும் கவனத்தையும் ஈர்த்துக் கொண்டது. ஊர்வலத்தை கண்ணுற்ற நோர்வேஜிய மக்களுக்கு துண்டுப்பிரசுரங்களும் வழங்கப்பட்டது. அபிவிருத்திக்கான பொருளாதார உதவி என்ற பெயரில் மேற்குலக நாடுகளிடம் இருந்து பெறும் பணத்தின் மூலம் சந்திரிகா அரசு நவீன இராணுவப் போர்த்தளபாடங்களை கொள்வனவு செய்துகொள்வதை, சந்திரிகா அம்மையாரையும் இராணுவத் தளபாடங்களையும் காட்சிப்படுத்தி ஊர்வலத்தின் முன்னணியில் நகரச் செய்ததும் அத்தோடு சேர்ந்து ஒலித்துக் கொண்ட பறை வாத்திய இசையும் இவ் ஊர்வலத்தின் சிறப்பம்சமாகும்.

நோர்வேயில் நடைபெற்ற தொழிலாளர் தின ஊர்வலத்தில் பல வெளிநாட்டவர் தொகுதிகளாக பங்குகொண்ட போதும் அவை அனைத்திலும் தமிழீழ மக்களின் தொகுதியே பெரிய அளவில் அமைந்திருந்தது என்பது சிறப்பம்சமாகும்.

## மேதின ஊர்வலம் - சுவிஸ்



ஒடுக்கப்பட்ட தொழிலாளர் வர்க்கத்தின் புரட்சியை நினைவுகொள்ளும் தொழிலாளர் தினமாகிய மே 1ம் திகதியில் சுவிஸ் வாழ் தமிழீழ மக்களாலும் சூரிச், ஜெனீவா ஆகிய இரு பிரதான நகரங்களில் மேதினப் பேரணிகள் நடாத்தப்பட்டன.

காலை 10.00 மணிக்கு சூரிச்சில் திரண்ட ஆயிரத்தை எட்டக் கூடிய மக்கள் மத்தியில் எமது பாரம்பரிய கலை வெளிப்பாடுகளும் விடுதலையை சித்தரித்துக் காட்டியுள்ளன. தவில், நாதஸ்வரம், பொய்க்கால் குதிரையாட்டம், கரகாட்டம், என்பவற்றுக்கிடையில் ஒடுக்கப்பட்ட எம்மினத்தின் துயரச் சம்பவங்களும் சிறீலங்கா ஆட்சியாளர்களின் ஒடுக்குமுறைச் சம்பவங்களையும் தெளிவாக் காட்டும்வகையில் இரு ஊர்திகள் பேரணிக்கிடையில் நகர்ந்து சென்று முடிவையெட்டியதும் தமிழீழ விடுதலைப்புலிகளின் சுவிஸ் பணியாளர் ஒருவர் சிற்றுரையாற்றினார். ஒடுக்கப்பட்டவர்கள் சார்பில் திரண்ட எம் மக்களின் விடுதலைக்கான காலம் கனிந்து விட்டதையும் அது 21ம் நூற்றாண்டில் தமிழீழமாகப் பிரசவமாகுமென்ற நம்பிக்கையுடன் பேச்சை முடித்துக் கொண்டார்.

பிற்பகல் 2.00 மணியளவில் ஜெனீவாவில் திரண்ட பல நூற்றுக்கணக்கான மக்களும் எம் விடுதலை செய்திகளை தாங்கிய பதாகைகளுடன் நகர்ந்து சென்றதை அவதானிக்க முடிந்தது ஜெனீவாவில் 26 தொழிற் சங்கங்களும் 6 விடுதலை அமைப்புக்களும் ஒன்றிணைந்து ஒழுங்குசெய்த பேரணியில் எமது தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பும் அங்கம் கொண்டது குறிப்பிடத்தக்கது.

## மேதின ஊர்வலம் - பாரிஸ்



பாரிசின் மையப்பகுதியில் அமைந்திருக்கும் குடியரசுச் சிலை சதுக்கத்தில் கூடிய பெருமளவிலான தமிழீழக் குடிமக்கள் ஏனைய தோழமை அமைப்புக்களுடன் ஊர்வலமாகச் சென்றனர். தமிழீழத் தேசியக் கொடியுடனும், தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களது உருவப்படத்திற்குப் பின்னால் அணியாகத் திரண்ட மக்கள் சிறீலங்கா அரசிற்கெதிரான கோஷங்களையும், தமிழீழ விடுதலைக்கு சர்வதேச ஆதரவினைக் கோரிய கோஷங்களையும் எழுப்பியபடி ஊர்வலமாகச் சென்றனர். இவ் ஊர்வலத்தில் தமிழர் அமைப்புக்களின் பல பிரதிநிதிகளும் பங்கேற்றனர்

## மேதின ஊர்வலம் - ஜேர்மனி



ஜேர்மனியில் மேதினத்தன்று தமிழர்களின் குரல் ஓங்கி ஒலித்தது. டுஸில்டோர்ப், பிராங்பேட், பிறிமன் ஆகிய பிரதான நகரங்களில் தமிழர்களின் ஊர்வலங்களும் இடம்பெற்றன. இவற்றில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் கலந்துகொண்டனர். சிறீலங்காவில் தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதைக் கண்டித்தும், தமிழீழ விடுதலையை அங்கீகரிக்கக் கோரியும் இந்த ஊர்வலங்களில் குரல் எழுப்பப்பட்டன. டுஸில்டோர்ப் நகரில் இடம் பெற்ற பிரதான ஊர்வலத்தின் போது, தவில் கச்சேரி, காவடி, பொய்க்கால் குதிரையாட்டம் ஆகியவை இடம்பெற்றன. இங்கு தமிழர்களின் தகவல் நிலையம் ஒன்று ஏற்படுத்தப்பட்டு பரப்புரைகள் செய்யப்பட்டன. தமிழீழ விடுதலையை ஏற்றுக்கொள்ளுமாறு ஜேர்மன் அரசை வற்புறுத்தும்படி அங்கு வந்த ஜேர்மன் மக்களிடம் கேட்கப்பட்டது. மேதின ஊர்வலத்தின் இறுதியில் நடைபெற்ற கூட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஜேர்மனிப் பணியகக் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் உரையாற்றினார்.



# தடைகளை உடைக்கும் மனோபலத்தைப் பெற்றுவிட்டோம்

**- மேதினக் கூட்டத்தில் கரிகாலன் -**

இன்று தொழிலாளர் தினம். உலகப் பாட்டாளி வர்க்கம் அனைத்தும் ஒன்றுதிரண்டு தங்கள் உரிமைக்காகப் போராடுகின்ற நாள். தமிழீழத்திலும் தொழிலாளர்கள் தங்கள் ஒற்றுமை உணர்வை நிலை நிறுத்திக் கொள்ளும் புரட்சிகரமான நாள். இந்தத் தொழிலாளர் தினம் உலகெங்கிலும் கொண்டாடப்பட்டாலும் தமிழீழத்தில் வாழுகின்ற மக்கள் தங்கள் உண்மையான உணர்வுகளை வெளிக்காட்டுவதன் மூலம் இன்றைய வாழ்வு நிலையை அனைத்துலகங்களுக்கும் அறியச் செய்ய முடியும். இவ்வாறு சனசமூக வளாக அபிவிருத்தி நிலைய பொது முகாமையாளர் திரு.இ.சிவனேசன் தலைமையில் நடைபெற்ற மேதினக் கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் அரசியல் துறைத்துணைப் பொறுப்பாளர் திரு.கரிகாலன் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் தொழிலாளருடைய உழைப்பிலேதான் ஒரு நாட்டினுடைய பொருளாதாரக் கட்டமைப்பு, அந் நாட்டினுடைய செழிப்பு அந்நாட்டினுடைய தொழிலாளர் கைகளிலேதான் இருக்கின்றது. ஆனால் எமது தமிழீழ மண் இன்று அந்நிய ஆக்கிரமிப்பினால் சூழப்பட்டு, பொருளாதாரத் தடைகளினால் உருக்குலைக்கப்பட்டும் எங்கள் தொழிலாளர்கள் அகதிகளாக நாதியற்றவர்களாக, அநாதைகளாக அலைந்து கொண்டிருக்கின்றார்கள். எமது மக்கள் இராணுவத்தின் படையெடுப்புக்களிலும், குண்டுவீச்சுக்களிலும், ஆக்கிரமிப்புக்களிலும் அகப்பட்டிருந்தாலும் அதற்கு முகம் கொடுத்து இந்தப் போராட்ட வாழ்வோடு ஒன்று சேர்ந்துள்ளார்கள். இதனை உடைத்தெறியக்கூடிய மனோபலத்தை இவர்கள் பெற்றுவிட்டார்கள் என்பதையே இந்த எழுச்சிப் பேரணி எடுத்துக் காட்டுகின்றது. இந்த விடுதலைப் போர் எங்கள் நாட்டை மீட்டெடுப்பதற்காக, எங்கள் மண்ணை நாங்கள் ஆளவேண்டும் என்பதற்காக தொடர்ந்து கொண்டிருக்கின்றது. உலகத்திலே வாழுகின்ற தமிழர்களுக்கெல்லாம் இந்த தமிழீழப் போர் இன்று தலைநிமிர்ந்து வாழ வைத்திருக்கின்றது. புலம் பெயர்ந்து உலகத்தில் வாழுகின்ற தமிழர்கள் எல்லோரும் இந்தப் போராட்டத்திற்கு இனியும் உதவவில்லையென்றால் ஒரு குற்ற உணர்வு உறுத்திக் கொண்டே இருக்க வேண்டும். இந்தப் போராட்டத்தை வென்றெடுக்கவேண்டும் என்பதற்காக தங்களாலான முழுப் பணியையும் அம் மக்களுடைய எதிர்பார்ப்புக்களையும் உங்களுடைய பங்களிப்பு நிச்சயம் எங்கள் மண்ணை மீட்டெடுக்க நாங்கள் அனைவரும் அணிதிரள்வோம் என இன்றைய நாளில் உறுதி எடுத்துக்கொள்வோம்.

தமிழீழத் தேசியத் தலைவர் எதிர்பார்த்த மக்கள் புரட்சியே இன்று விழித்துக் கொண்டிருக்கின்றது. மக்கள் இப் போராட்டத்தில் இணைந்து பெரும் தேசிய சக்தியாக உருவெடுத்துக் கொண்டார்கள். எழுச்சி பெற்ற இம்மக்கள் நாளை மலரப் போகும் தமிழீழத்தில் வாழத் தகுதி படைத்தவர்கள் ஆவர். வவுனியாவரை இராணுவச் சோதனைச் சாவடிகளை அள்ளிச் செல்லக் கூடிய போர் நுட்பத் திறமை எமது தலைவருக்கு உண்டு. அவரது கரத்தை நாம் பலப்படுத்த வேண்டும் என உறுதி எடுத்துக் கொள்வோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

**




# உரிமையையும் தலைமையையும் அங்கீகரியுங்கள்

**- பாரிஸில் வாழ்வுரிமை மாநாடு -**

தமிழர்களின் தேசிய சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கக் கோரியும் விடுதலைப்புலிகளை தேசிய விடுதலை இயக்கமாக அங்கீகரிக்கக் கோரியும் பிரான்சில் 30 தமிழ் பொது அமைப்புக்கள் கூட்டுத் தீர்மானம் ஒன்றை மேற்கொண்டனர்.

பாரிசில் மார்ச் 28 அன்று இடம்பெயர்ந்த தமிழர் வாழ்வுரிமை மாநாட்டின் இறுதியில் இப் பொதுத் தீர்மானத்தை மேற்கொண்ட அமைப்புக்கள் இதனை வலியுறுத்தும் மனுக்களை பிரெஞ்சு ஜனாதிபதி திரு.ஜக் சிராக் அவர்களுக்கும், ஐ.நா. செயலாளர் நாயகம் திரு கோபி அனான் அவர்களுக்கும் அனுப்பி வைத்தனர்.

இம் மாநாட்டில் தமிழர்களின் தேசிய சுயநிர்ணய உரிமை, தேசிய தலைமை தொடர்பான கருத்துடன் ஆராயப்பட்டன. அனைத்துலகத் தமிழர் கூட்டமைப்பின் பேச்சாளர் திரு. ஜேம்ஸ்கரன், தமிழர் தகவல் மையத்தைச் சேர்ந்த திரு. வரதகுமார், பிரெஞ்சு நகர சபை உறுப்பினர் திரு. அலன் ஆனந்தன் ஆகியோர் உட்படப் பலர் உரையாற்றினர். தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அனைத்துலகப் பணிமனைப் பொறுப்பாளர் திரு. மனோகரன் சிற்றுரையாற்றினார். ஈற்றில் இரு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதுடன் சர்வதேச தலைவர்களுக்கான மனுவில் அனைத்து அமைப்புக்களும் கையொப்பமிட்டன. பிரெஞ்சு தமிழர் கூட்டமைப்பு இம்மாநாட்டை ஏற்பாடு செய்திருந்தது







20-04-99 அன்று மன்னாரில் சிறிலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட நேரடிமோதலில் போராளி ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

**2ம் லெப். புவனேஸ்வரி**
**பொன்னம்பலம் மீரா**
யாழ். மாவட்டம்
த/மு சுதந்திரபுரம் உடையார்கட்டு

18-04-99 அன்று மன்னார் மாவட்டத்தில் சிறீலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட நேரடி மோதலில் ஐந்து போராளிகள் வீரச்சாவடைந்துள்ளார்கள்.

**கப்டன் தர்மேந்திரா**
**தருமலிங்கம் சதீஸ்வரன்**
யாழ். மாவட்டம்
த/மு யோகபுரம் மல்லாவி

**கப்டன் சசிகரன்**
**நிர்சாட் தாசன்**
கிளிநொச்சி
த/மு அம்பலப் பெருமாள் வீதி
ஸ்கந்தபுரம்

**2ம் லெப். சோபன்**
**அகஸ்தியன் ஜெபநேசன்**
யாழ். மாவட்டம்
த/மு மன்னார் மாவட்டம்

**வீரவேங்கை தமிழ்ச்செல்வன்**
**தங்கவேல் தயாநிதி**
வவுனியா
த/மு மன்னார்

**வீரவேங்கை காண்டீபன்**
**செபின் சுரேஸ்குமார்**
மன்னார் மாவட்டம்

21-04-99 அன்று திருகோணமலை கடற்கரைச் சேனை எனும் இடத்தில் சிறிலங்கா இராணுவம் பதுங்கி இருந்து தாக்கியதில் போராளி ஒருவர் வீரச்சாவைத் தழுவிக் கொண்டுள்ளார்.

**மேஜர் அலெக்ஸ்சாண்டர்**
**நடேசபிள்ளை கெங்கேஸ்வரன்**
திருகோணமலை

முல்லைத்தீவு கடற்பகுதியில் 01.05.99ம் திகதி பிற்பகல் 4.30 மணிக்கும் இரவு 8 மணிக்கும் இடையில் கடற்புலிகளுக்கும் சிறிலங்கா கடற்படையினருக்கும் இடையில் இடம்பெற்ற மோதலின் போது 11 கடற்புலிகள் வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

**லெப். கேணல் நர்சன்**
**அல்லது தேவநேசன்**
**முத்துக்குமார் கலைஞானசேகர்**
யாழ்ப்பாணம்

**மேஜர். குணசீலன்**
**மார்க்கண்டு கந்தசாமி**
மட்டக்களப்பு

**மேஜர். உதயகாந்தன்**
**சண்முகம் சத்தியசீலன்**
முல்லைத்தீவு

**கப்டன் பரிதி**
**சின்னத்தம்பி ஜெகதீஸ்வரன்**
யாழ்ப்பாணம்

**கப்டன் எழுமைந்தன்**
**நவரெட்ணம் நவநீதன்**
கிளிநொச்சி

**கப்டன் புதியவன்**
**வித்தியானந்தன் உதயகுமாரன்**
யாழ்ப்பாணம்

**கப்டன் வான்மதி**
**குமாரசாமி செல்வரஜனி**
யாழ்ப்பாணம்

**2ம் லெப். எழுமகள்**
**அன்ரனிதாஸ்**
கிளிநொச்சி

**2ம். லெப். தமிழ்மகள்**
**விக்னேஸ்வரி**
யாழ்ப்பாணம்

**2ம். லெப். சுகந்தா**
**அற்புதானந்தன் சுகந்தா**
யாழ்ப்பாணம்

**வீரவேங்கை தமிழரசி**
**சண்முகராஜா செவந்தலாதேவி**
யாழ்ப்பாணம்





# தமிழ் மக்கள் கவசம்!

## குடாநாட்டில் ஒரு அணுகுமுறை.. வன்னியில் மறுஅணுகுமுறை...

மன்னார் மாவட்டத்தில் உயிலங்குளம் பகுதியில், இராணுவப் பயிற்சி பெற்ற விசேட பொலிஸ் பிரிவினர் மீது, ஏப்ரல் 16ம் திகதி விடுதலைப் புலிகள் அதிரடித் தாக்குதல் ஒன்றை நடத்தினர். கணிசமான இழப்பை ஏற்படுத்தினர். இத் தாக்குதல் நடந்த கையுடன், சிறிலங்கா இராணுவம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள வன்னிப் பகுதிக்கான போக்குவரத்தை முற்றாகத் தடைசெய்தது. உயிலங்குளம், விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதிக்கும், மன்னார் வவுனியாப் பகுதிக்குமான ஒரு போக்குவரத்துப் பாலமாக இருந்துவந்துள்ளது. சிங்களப்படையினரின் ஆக்கிரமிப்புப் பகுதிக்கும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள வன்னிப் பகுதிக்குமான ஒரு தொடர்புமையம் போல அமைந்த பகுதி. இதற்கூடாகவே, விநியோகங்களும், தொண்டர் அமைப்புக்களின் வாகனச் சேவைகளும், மக்கள் போக்குவரத்துக்களும் இடம்பெறுகின்றன.

**சுப்பு**

இதற்கூடான போக்குவரத்தை சிறிலங்கா இராணுவம் முற்றாக தடைசெய்து வைத்திருந்ததால், வன்னி நிலைமை மிக மோசமடைந்தது. அம்புலன்ஸ் வாகனப் போக்குவரத்துக்கள் நடைபெறவில்லையாதலால், ஒன்பது நோயாளர்கள் மேலதிக சிகிச்சை பெறமுடியாதநிலையில் அநியாயமாக இறக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. மக்களின் உணவுப்பிரச்சினையும், மருத்துவப் பிரச்சினையும் பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியது. வன்னி வாழ்மக்கள் முழுமையாக சிறையுண்ட உணர்வையும், உதவியற்ற நிலையையும் உணர்ந்தனர். பலமுனைகளில் எழுந்த கோரிக்கைகள், எதிர்ப்புகளுக்கு பணிந்து, தற்போது போக்குவரத்துக்களுக்கு சிறிலங்கா இராணுவம் வழிவிட்டுள்ளது.

இரண்டு வாரங்களாக, சந்திரிகாபடை மேற்கொண்ட இந்த போக்குவரத்துத் தடைக்கு, சந்திரிகா அரசாங்கத்தால் விளக்கம் எதுவும் தரப்படவில்லை. அதேவேளை, அநியாயமாக உயிர்துறந்த நோயாளர்கள் குறித்தோ, பாதிக்கப்பட்ட மக்கள் குறித்தோ எள்ளளவும் அலட்டிக்கொள்ளவில்லை. ஆனால், இதுவிடயத்தில் இராணுவம் முன்வைத்த நிபந்தனை விசித்திரமாக உள்ளது. உயிலங்குளத்தில் உள்ள படையினரை தாக்குவதில்லை என விடுதலைப் புலிகள் உறுதி தெரிவித்து உத்தரவாதம் வழங்கினாலேயே, உயிலங்குளத்தினூடான போக்குவரத்துக்களுக்கு அனுமதிக்க முடியும் என, இராணுவதரப்பில் நிபந்தனை விதிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளின் தாக்குதலில் இருந்து, தம்மைப் பாதுகாத்துக்கொள்ள முடியாத இயலாத்தன்மையில், மக்கள் சம்பந்தப்பட்ட இந்தப் போக்குவரத்துப் பிரச்சினையை இணைத்து, தமது பாதுகாப்பைத் தேடிக்கொள்ளும் கையாலாக நிலையிலேயே சிங்களப்படை உள்ளனர் என்பது இதன்மூலம் வெளிப்படுகின்றது. மடு ஆலயப்பகுதியிலும், அதன் புனிதப் பகுதியிலும், தங்கியுள்ள இருபதினாயிரத்திற்கும் மேற்பட்ட இடம்பெயர்ந்த மக்களை சிறிலங்கா இராணுவம் மனிதக்கவசமாக பயன்படுத்துகின்றது என, மன்னார் பேராயர் தெரிவித்த கருத்துக்கு ஒத்திசைவாக அதனை மேலும் வலுப்படுத்தும் செயற்பாடுகளிலேயே சிங்களப்படை ஈடுபட்டுள்ளது.

தமிழீழப் பிரதேசங்களில் நிலைகொண்டுள்ள ஆக்கிரமிப்புப் படையினர், எப்போதும், எங்கும் எல்லையிலும் தாக்கப்படுவர். இத்தாக்குதல்களில் இருந்து சிங்களப்படையினர் தப்பித்துக்கொள்ள ஒரேஒரு வழிதான் உண்டு. அதாவது தமிழீழப் பகுதிகளில் இருந்து வெளியேறிக் கொள்வது. அதைவிடுத்து, தாக்குதலை நிறுத்தினால் போக்குவரத்துக்கு அனுமதிப்போம், தாக்கினால் அனுமதியோம் போன்ற வியாபாரப் பேரம்பேசல்கள், ஆக்கிரமிப்புக்கு எதிரான போரில் சாத்தியப்படாது.

விடுதலைப் புலிகள் தாக்குவார்கள் என்றோ, தமிழ்மக்கள் எதிர்க்கின்றார்கள் என்றோ கூறி, வடக்கு கிழக்கில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை சந்திரிகா அரசு, நடத்தாமல் விட்டதில்லை. தாக்கமாட்டோம் என்று உத்தரவாதம் தந்தால் தான் தேர்தல் நடத்துவோம் என, சந்திரிகா அரசாங்கம் தெரிவிக்கவில்லை. ஏனெனில் அது அவர்களின் அரசியல் நலன்சார்ந்த தேவை. தமிழ்மக்களின் பிரதிநிதிகள் என சொல்லிக்கொள்ள சிலர் தேவைப்படுகின்றனர்.

தமக்கு சாதகமாக நடந்துகொள்ளுகின்றனர் என உலகிற்குக் காட்டிக் கொள்ள இப்படியான பொம்மைகள் அவர்களுக்குத் தேவைப்படுகின்றனர். அவர்கள் விடுதலைப் புலிகள் போன்று தமிழீழம் கேட்கவில்லை. அரசின் தீர்வுப்பொதிக்கு அமோக ஆதரவு தருகின்றனர் என்று காட்டிக்கொள்ள இப்படியான பேர்வழிகள் ஆட்சியாளர்களுக்குத் தேவைப்படுகின்றனர். அதனால் விடுதலைப் புலிகள் தாக்கினாலும், பொதுமக்கள் எதிர்த்தாலும் அரசாங்கம் தேர்தலை நடத்த கடும்பிடியாக நின்றது.

வடக்கு கிழக்கில் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்துகின்றனர். சிவில் நிர்வாகத்தைக் குழப்புகின்றனர். அபிவிருத்திப் பணிகளுக்கு முட்டுக்கட்டை போடுகின்றனர் எனக்கூறி சந்திரிகா அரசு, ஓய்ந்திருக்க யோசிக்கவில்லை. அது சிவில் நிர்வாகம் என்ற பெயரில் இராணுவ நிர்வாகத்தை அமைத்துக் கொண்டது. விடுதலைப் புலிகள் குழப்பம் விளைவித்தாலும், வடக்கு கிழக்கை புனரமைப்போம், புனர்நிர்மாண வேலைகளைச் செய்வோம் எனக் கூறிக்கொண்டு, உலக நாடுகளில் எதிர்ப்பும் கண்டனமும், சந்திரிகா அரசை நெருக்க, மக்களையும், மக்களின் நலன்களையும் தேவைகளையும் கவனமாக்கும் இந்த முயற்சியில் இருந்து அதனை தற்காலிகமாகப் பின்வாங்க வைத்துள்ளது.

> **விடுதலைப் புலிகளின் தாக்குதலில் இருந்து, தம்மைப் பாதுகாத்துக்கொள்ளமுடியாத இயலாத்தன்மையில், மக்கள் சம்பந்தப்பட்ட இந்தப்போக்குவரத்துப் பிரச்சினையை இணைத்து, தமது பாதுகாப்பைத் தேடிக்கொள்ளும் கையாலாகாத நிலையிலேயே சிங்களப்படை உள்ளனர் என்பது இதன்மூலம் வெளிப்படுகின்றது.**

பெரும் பணத்தை திரட்டிக்கொண்டது. ஏனெனில் சிங்கள இராணுவம் ஆக்கிரமித்த பின் குடாநாட்டில் அமைதி நிலவுவதாகவும் மக்கள் சந்தோசமாக வாழுகின்றனர் எனவும், காட்டிக்கொள்ளும் தேவை இருக்கின்றது. அதனால், அது வீதிகள் போட்டது. மின்சாரம் விநியோகித்தது. திரையரங்குகளில் சினிமாக்கள் காட்டியது. தொலைபேசி இணைப்புக்களை ஏற்படுத்தியது.

ஆனால் உயிலங்குளத்தில், அது மறுவழமான அணுகுமுறையை கையாள யோசித்தது. மக்களின் நலன்களை தேவைகளைப் பணயம்வைத்து, தனது பாதுகாப்பைத் தேடிக்கொள்ள முனைந்தது.




சிங்கள இராணுவத்தலைமை இன்னொரு திட்டத்தையும், இந்த நெருக்கடிக்குள் தீர்த்துக்கொள்ளமுடியுமா என யோசித்தது. அதாவது மன்னார் வவுனியா வீதியில் அமைந்திருந்த, இந்தத் தொடர்புநிலையை, நகர்த்தி, புதிதாக ஆக்கிரமித்துக்கொண்ட பகுதிக்குக் கொண்டுவர அது முயற்சித்தது. அந்தக் கட்ட இராணுவ நகர்விற்கு அது அதற்கு உதவியாக அமையும் எனக் கருதியது. என்றும் எதுவும் சாத்தியப்படவில்லை.

போர்க்கோசம் இராணுவ நடவடிக்கைகளுக்கு முன்னர் வன்னிசென்ற, விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்களைச் சந்தித்துப்பேசி, மக்களின் குறைகளை நேரடியாக அறிந்து அவைத் தீர்க்க முயற்சி செய்வதாகவும், சமாதானப் பேச்சுவார்த்தையொன்றை ஆரம்பிக்க முயற்சிகளை மேற்கொண்டிருப்பதாகவும் கூறித் திரும்பிய மதத்தலைவர்கள் அடங்கிய சமாதானக்குழுவினர் சந்திரிகாவைச் சந்தித்துள்ளனர். அவர்கள் சென்று திரும்பிய பாதையால், ஒரு இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கை முடிந்த பின்னர், அதன் அறுவடையாகக் கருதிய மாகாணசபைத் தேர்தல்கள் நடந்து முடிந்த பின்னர், வன்னிசென்று திரும்பி இரண்டு மாதத்தின் பின்னரேயே, சமாதானத் தூதுக்குழுவினரால் சந்திரிகாவைச் சந்திக்க முடிந்திருக்கின்றது. வன்னிவாழ் மக்களின் துன்பத்தை அவர்களால் துடைக்க முடியவில்லை. அதேவேளை, சந்திரிகா அரசின் ஆக்கிரமிப்பு இராணுவ நடவடிக்கைகளையும் அவர்களால் தடுக்கமுடியவில்லை. ஆனால் கடந்தவாரம் சந்திப்பு நடத்தியிருக்கின்றனர். இதில் இன்னொரு விசித்திரம் யாதெனில் அவர்கள், மீண்டும் வன்னிசெல்லவுள்ளனராம் என்பதே. இந்த மாத இறுதியில் அவர்கள் வன்னிசெல்ல திட்டமிட்டுள்ளனர். இதன்போது, சிறிலங்கா சனாதிபதி சந்திரிகாவின் சமாதானத்திற்கான நல்லெண்ணத்தையும் அவர்கள் காவிச்செல்வர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கிடையில், இந்த மாதத்தின் முதல் வாரத்தில் இருந்து, இறுதிவரை இராணுவத்தினர் ஆட்சேர்ப்பு நடவடிக்கையும் ஆரம்பித்திருக்கின்றது. பத்தாயிரம் பேரைத் திரட்டுவதென்பது திட்டம். [illegible] தொகுதி நடத்தவும், தலைமையிலான படையினருக்கு மாற்றீடாகவும், பத்தாயிரம் படையினர் உடன் தேவை என அறிவிக்கப்பட்டு, இவ் ஆட்சேர்ப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மொத்த சிங்களப்பேரினவாதத்தைத் தலைமை தாங்குகின்ற சந்திரிகாவின் இவ் அணுகுமுறை குறித்து, தமிழ்மக்கள் தெளிவாகவே இருக்கின்றனர். ஆனால், சமாதானம் பேசுபவர்களால்தான் இதனை உணரமுடியாமல் உள்ளதோ! தெரியவில்லை. அல்லது, ஒருவேளை, இந்த கைய முயற்சிகளைக்கொண்டு எல்லாத் தரப்பையும் முட்டாளாக்கிவிட சந்திரிகா முயற்சிக்கின்றார் என்றும் கருத இடமுண்டு.

# கணப்பொழுது



## லெப். கேணல் நவம்

கீழ்த்திசையில் இருந்து கிழம்பி வரும் கதிரவனின் ஒளியில் அந்த முகம் பளபளப்பதுபோல நெஞ்சை நிமிர்த்தி உறுதியோடு நிமிர்ந்து நிற்கும் காட்டு மரங்களில் அந்தக்கம்பீரம் தொனிப்பது போல அது எங்கள் நெஞ்சகம் எங்கும் நிறைந்திருக்கும் இனியவன் நவத்துக்குரியது. டடி தோழர்கள் செல்லமாக நிறைந்த பாசத்தோடு இப்படித்தான் அவனை அழைப்பார்கள் அவனை நினைத்துக் கொள்ளும் போது அந்தக்கம்பீரமான தோற்றமும் குறும் தாடியும் மூழியான வலது கையும் தான் எங்களிற்கு நெஞ்சில் எழும் நவம் இந்தப் பெயர் இந்திய இராணுவத்திற்கு சிம்ம சொப்பனமாய் இருந்த பெயர் விடுதலைப்புலிகளின் தலைமைப்பீடத்தை ஒழித்து விடும் நப்பாசையோடு மணலாற்றுக்காட்டுக்குள் காலடி வைத்த இந்திய இராணுவத்தை கலங்கடித்தவர்களில் நவமும் ஒருவன் மணலாற்றுக்காடு நவம் கைவீசி காலார நடந்த வீடு காட்டுக்குள் இறங்கினால் திசை அறிகருவி இன்றியே பயணிக்கும் திறமை அவனுக்கு உண்டு வழிக் கொஞ்சம் மலையகம் நவத்தை பெற்றெடுத்த போதும் கொக்குத்தொடுவாய் கிராமம்தான் அவனை மடியிலிட்டு சீராட்டி வளர்த்தது.

மலையகத்தில் ஒடுக்குமுறைகளின் கிடுக்கிப்பிடிக்குள் சிக்க விரும்பாது கொக்குத்தொடுவாய்க்கு வந்த போது அங்கும் அத்துமீறிய சிங்களக் குடியேற்றங்களால் ஆபத்துகள் காத்திருந்தன மணலாற்றின் எல்லைப்புறங்களில் சிங்களக் காடையர்களுக்கு எதிராக தந்தை ஊர்காவலில் ஈடுபடும்போது தந்தையுடன் செல்வான் 1983ன் காலப்பகுதி நவத்தின் உள்ளத்தில் விடுதலை வேட்கையை விதைக்க விடுதலைப் புலிகளோடு அவன் இணைந்து கொள்கிறான். மணலாறு முல்லைத்தீவு மாவட்டங்களின் மக்களுக்கு நவம் அறிமுகமாகின்றான். மக்களிடம் அவனுக்கும் அவனிடம் மக்களுக்கும். இணைபிரியாத பாசம் வளர்கிறது. மணலாற்றின் எல்லைப் பகுதிகளில் சிங்கள இராணுவத்திற்கெதிராக பல தாக்குதல்களில் நவம் பங்கேற்கிறான் நவத்தின் பேராற்றல் வலுப்பெறுகின்றது. அவனின் மதிநுட்பம் வளர்கின்றது. இராணுவப் பரிசோதனை ஒன்றில் அவன் ஈடுபடுகின்றான் எதிர் பாராமல் அவனது வலது கரம் மணிக்கட்டின் கீழ் சிதைந்து விடுகின்றது.

தோழர்கள் துடித்துப் போகிறார்கள் ஆனால் நவம் துளிகூட வருத்தப் படவில்லை இடது கரத்தால் துப்பாக்கிகளை கையாளக் கற்றுக் கொள்கிறான். ஒற்றைக் கையாலேயே வாகனங்களை ஓட்டுகிறான். [illegible] தன்னம்பிக்கையோடு தளராது தன் பணிகளை அவன் மேற்கொள்கிறான். இவ் வேளையில் தான் இந்திய இராணுவத்தின் அராஜகம் தமிழீழமண்ணில் அரங்கேறுகிறது இந்திய இராணுவத்தின் கொடிய நினைவுகளுக்கு சாட்டை அடி கொடுக்க விடுதலைப் புலிகள் திட்டமிடுகிறார்கள். அவர்களில் நவமும் ஒருவனாகிறான். காட்டு மரங்களையே காப்பரண்களாக்கிக் கொள்கின்றான் அவன். நெடுங்கேணிப் பாடசாலை அங்கு முகாமிட்டிருக்கிறது இந்திய இராணுவம் அங்கிருந்து கொண்டு மக்களைத் துன்புறுத்துவதும் ஈனம் செய்வதுமாக அவர்கள், அவர்கள் மீது தாக்குதல் ஒன்றைத் திட்டமிடுகிறார்கள் நவத்தின் அணியினர்.

13-05-1989 அன்று திடீர்த் தாக்குதல் திட்டமிட்டபடி நடக்கிறது. மின்னல் எனப் பாய்ந்த விடுதலைப் புலிகளின் முன் இந்திய இராணுவத்தின் போர்த்திறன் புறம் காண்கிறது. வெற்றி! வெற்றி! வெற்றியுடன் அவர்களிடம் இருந்து பறித்தெடுத்த ஆயுதங்களுடன் விடுதலைப்புலிகள் காட்டுப் பாதையூடாக வந்து கொண்டிருக்கின்றார்கள் அப்போது இந்திய இராணுவத்தினர். ஏவும் எறிகணைகள் நான்கு திசைகளிலும் முழங்குகின்றன.

அவற்றில் ஒன்று நவத்தின் அருகே வீழ்ந்து வெடித்துச் சிதறுகிறது. நவம் கடுமையான காயத்திற்குள்ளாகின்றான். டடி டடி என்று தோழர்கள் துடித்து நிற்கிறார்கள் அவசர முதலுதவிகளின் பின் நவம் சிகிச்சைக்காக தமிழகம் கொண்டு செல்லப்படுகின்றான். அங்கே கொடுக்கப்பட்ட சிகிச்சைகள் எதுவும் பயனளிக்காதுபோக 15-5-89 அன்று ஒரு கணப்பொழுதில் அவன் உயிர்ப் பறவை சிறகுவிரித்துக் கொள்கிறது. தேசியத் தலைவரின் தோளோடு தோள் நின்ற நவம் என்கின்ற தூண் சாய்ந்து விடுகிறது. தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தனது அங்கம் ஒன்றை இழந்த போதும் தளராது இறுதிவரை உறுதியோடு போராடி உயிர் ஈந்த வீரன் நவத்தின் நினைவுகளை உயிர்ப்பிக்க தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களால் லெப்.கேணல் நவம் அறிவுக்கூடம் உதயமாகியது. அந்த மாவீரன் நவத்தின் இலட்சியக் கனவுகளை சுமந்து லெப்.கேணல் நவம் அறிவுக் கூடம் வியாபித்து நிற்கின்றது.




எழுதியவர் - போராளி சி.கண்ணம்மா

Tamileelam Archive

## இரு வாரத்துக்கு ஒருமுறை கடிதம் மூலம் சந்திப்போம்!

### அன்புச் சகோதரமே!

எங்கள் தேசிய விடுதலை இயக்கமாம் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் 05.05.1999 ல் தனது 24வது ஆண்டில் அடி எடுத்து வைக்கின்றது. 1972 முதல் தமிழ்ப் புதிய புலிகள் என்ற பெயருடன் செயற்பட்டு வந்த தலைவர் பிரபாகரன் தலைமையிலான தமிழீழ சுதந்திர இயக்கம் 05.05.1976 முதல் தமிழீழ விடுதலைப் புலிகள் என்ற பெயருடன் இயங்கத் தொடங்கியது. அன்று முதல் தமிழீழத் தேசத்தின் தனித்துவத்தையும் இலட்சியத்தையும் சித்தரிக்கும் சின்னமாக புலிச் சின்னம் விளங்கி வருகிறது. மதுரையின் பிரபல சித்திரக்காரரான நடராஜன் என்பவரால் 1977ம் ஆண்டில் தலைவர் பிரபாகரனின் ஆலோசனையுடன் வரையப்பெற்ற உறுமும் புலி முகத்தைக் கொண்ட சின்னமே பின்னர் தமிழீழத் தேசக்கொடியில் இடம் பெற்று 27.11.1990 ல் தமிழீழத்தின் தேசக்கொடியாக இரண்டாவது மாவீரர் நாள் அன்று பிரகடனப்படுத்தப்பட்டது. தமிழீழ விடுதலைப் புலிகளின் இந்த மகத்தான வெற்றியின் பலமாக இருப்பவை தலைசிறந்த தலைமையும் வலுவான மக்கள் சக்தியும் சக்தியவலு மிக்க போராட்டமுமே ஆகும். தமிழீழ விடுதலைப் புலிகள் தமக்கென வாழாப் பெரும் பண்பின் வடிவங்கள். தங்கள் இன்னுயிர்களையே தமது தமிழீழ உடன் பிறப்புக்களாகிய எமது சுதந்திர வாழ்வுக்காக அர்ப்பணித்து நிற்கும் தியாக மறவர் திருக் கூட்டம். எங்கள் தேசத் தலைவர் பிரபாகரன் தலைமையில் கடந்த 23 ஆண்டுகளாக எமது மக்கள் எத்தனையோ சோதனைகளை எதிர்த்து நின்று தங்கள் விடுதலை என்ற மேலான உறுதியை உலகிற்கு மிகத் தெளிவாக்கி உள்ளனர். இன்று தமிழீழத்தின் வான் - கடல்- தரை மூன்றிலும் ஆக்கிரமிப்பாளனை விரட்டி அடிக்கும் மரபு வழி இராணுவமாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் பரிணாம வளர்ச்சி பெற்று நிற்கிறது. 1976ல் தங்கள் சுயநிர்ணய உரிமைப் பிரகடனத்தால் தங்கள் தமிழீழத் தேசத்தை மீள அமைக்க உறுதிபூண்டமையை உலகிற்கு அறிவித்த இலங்கைத் தமிழ் மக்கள் அன்று முதல் தமிழீழ மக்களாகத் தம்மை மீளவும் வெளிப்படுத்தி தங்களுக்கான அரசியலமைப்பை உருவாக்கும் படி 1977 தேர்தலைக் குடியோப்பமாக மாற்றியதன் மூலம் ஆணையிட்டனர். அந்த மக்கள் ஆணையை அன்று முதல் இன்று வரை முன்னெடுத்து தமிழீழ மக்களுடைய தமிழீழத் தேசத்தின் பல பகுதிகளை மீட்டு அரசு நோக்கிய அரசை செயற்படுத்தும் அரசாங்கமாகவும் மறு பகுதிகளில் ஆக்கிரமிப்பு சிங்கள இராணுவத்தினை படிப்படியாக விரட்டி அடிக்கும் மக்கள் போராட்ட சக்தியாகவும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் பெரு வளர்ச்சி பெற்று நிற்கிறது. எங்கள் தேசத் தலைவர் பிரபாகரனின் வலிமையும் மன உறுதியும் யாருக்கும் விலை போகாப் பெரும் பண்பும் இன்று உலகம் முழுவதற்கும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் சத்தியத்தன்மையை வலிமையை யாரிலும் சாராது மக்களில் தங்கி நிற்கும் பெருமையை நன்கு தெளிவாக்கி உள்ளது. இதனால் தமிழீழத்தின் சுதந்திரமே தமிழீழ மக்களின் அமைதிக்கு வழி என்ற தமிழீழ விடுதலைப் புலிகளின் எதிர்பார்ப்பை யாருமே மறுக்க முடியாது உள்ளனர். அதேவேளை தமிழீழ விடுதலைப் புலிகளின் தமிழீழ மக்களுக்குத் தேசிய பாதுகாப்பு வழங்கும் தன்மை தரை கடல் வான் வரை வளர்ந்து நிற்பதையும் உலகு கண்டு கொண்டுள்ளது. இந்நிலையில் தமிழீழம் சுதந்திரத்தை நோக்கிச் செல்வதை யாவரும் உணர்கின்றனர். இதனை இலண்டன் மாநாட்டில் பாதிக்கப்பட்டவர்களும் சாட்சிகளுமான தமிழ் மக்கள் மேலும் தெளிவாக எடுத்து விளக்கியுள்ளனர். டென்மார்க் அமைதிப் பேரணி தமிழீழ மக்களின் உண்மை நிலையை உலகு மேலும் நன்கு உணரத் துணைபுரிந்துள்ளது. இந்நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்ட அமைப்பு என்ற உண்மை மீளவும் உலகினால் முன்னையிலும் வேகமாக ஏற்றுக்கொள்ளும் நிலை விரைவாகிக் கொண்டிருக்கிறது. இதனைக் கண்டு மிரளும் சந்திரிகா மீண்டும் பயங்கர யுத்தங்களை தமிழீழ மக்கள் மேல் வேகப்படுத்தி தமிழீழத்தை இராணுவ ரீதியாக ஒழித்துக் கட்டலாம் என்ற பகற்கனவில் வேகமாக இறங்கி வருகிறார். இதனாலேயே தான் யுத்தத்தை நிறுத்த மாட்டேன் என சிங்கள சமாதானக் குழுவிடம் அழுத்தமாக கூறியுள்ளார். இவ்வாறு போர் தான் சந்திரிகாவின் முடிவென்றால் போரில் நாம் வென்று தமிழீழத்தை மீளவும் மீட்பது ஒன்றே எமக்கும் வழி. இதை 23 ஆண்டுகளுக்கு முன்பே உணர்ந்து அதற்காக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை நிறுவிய மகத்தான அரசியல் தீர்க்கதரிசியாக எங்கள் தேசத்தலைவர் பிரபாகரன் திகழ்கின்றார். அவரது தலைமையில் தமிழீழத்தேச விடுதலைப் போராட்டத்தை வென்றெடுக்க விரைவாக செயற்படுவோம். இன்றே செய்வோம் அதை நன்றே செய்வோம். இல்லை என்பதும் தாளை என்பதும் ஆற்றாதவன் சொல் என்ற தமிழ் முதுமொழியை மறவாது தமிழீழத் தேச விடுதலைக்கு உழைக்க நேரத்தை உருவாக்குவோம். இதுவே எங்கள் தமிழீழத் தாயின் அழைப்பு.

அன்பின் ஆசிரியர்
(04.05.1999)

6ம் பக்கத் தொடர்ச்சி

கொசோவாவில் நடைபெறுபவற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் தொடர்பு சாதனங்கள் தமிழீழ மக்களுக்கு நடைபெறுபவைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் இருப்பது வேதனைக்குரியது. நாம் தமிழீழ விடுதலைப் புலிகளை பயங்கரவாதிகளாகக் கருதவில்லை. தமிழீழ விடுதலைப் புலிகளை உள்ளடக்காத எந்த சமாதான முயற்சியும் அர்த்தமற்றது. ஐரோப்பிய நாடுகள் ஒன்று சேர்ந்து யுத்தத்தை நிறுத்தி தமிழ் மக்களுக்கு சமாதானம் ஏற்பட உதவ வேண்டும். யுத்தம் தொடர்வதனால் தமிழ் மக்கள் அழிக்கப்பட்டு வருகின்றனர். இதனை தடுக்க தமிழீழ விடுதலைப் புலிகள் அனைவரும் பெருமைப்படும் விதமாக திறமையான முறையில் எதிர் யுத்தம் நடாத்தி வருகின்றனர். பிரித்தானிய அரசாங்கம் சிறீலங்காவிற்கு ஆயுத விற்பனையை நிறுத்த வேண்டுமென வலியுறுத்தி வருபவர்களில் நானும் ஒருவன். நான் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையையும்

தமிழீழத்தையும் ஏற்றுக் கொள்வதற்கு அடையாளமாக உங்களின் தேசிய சின்னம் பொறித்த இந்த சால்வையை நானும் அணிந்து கொள்கின்றேன் எனக் கூறி தேசிய சால்வையை அணிந்ததும் மக்கள் மகிழ்ச்சிக் கரகோசம் செய்தனர்.

அதனை அடுத்து பின்வரும் மாநாட்டுத் தீர்மானங்களை கலாநிதி அர்ஜுனா சிற்றம்பலம் வாசித்தார்.

இலண்டனில் உள்ள அலெக்சாந்திரியா) பலஸில் 25.04.99 திகதி அன்று கூடியுள்ள ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட சிறீலங்காவின் கொடுமைகளால் பாதிக்கப்பட்டவர்களும் சாட்சிகளுமாகிய நாம் 'தமிழீழம் சுதந்திரத்தை நோக்கி' என்ற இம்மாநாட்டில் பின்வரும் தீர்மானங்களை மேற்கொண்டு அவற்றை நடைமுறைப்படுத்த உதவுமாறு பிரித்தானிய அரசின் தலைவி மாட்சிமை மிகு மகாராணி 2nd எலிசபெத் மகாராணி அவர்களையும் உலக நாடுகளையும் சிறீலங்கா அரசாங்கத்தையும் கேட்டுக்கொள்கின்றோம்.

* தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்று அங்கீகரியுங்கள்.
* சிறீலங்காவின் வடக்கு கிழக்கு மாகாணங்கள் தமிழ்த் தேசிய இனத்தின் பாரம்பரிய தாயகம் என்பதை ஏற்று அங்கீகரியுங்கள்.
* தமிழ் மக்களின் சட்டபூர்வமான தலைமை தமிழீழ விடுதலைப்புலிகள் என ஏற்று அங்கீகரியுங்கள்.
* யுத்தத்தை நிறுத்தி தமிழீழத்தில் இருந்து சிறீலங்காவின் ஆயுதப் படைகள் விலகவையுங்கள்

இந்த மாநாடு சிறீலங்கா தீவில் உள்ள தமிழ்த் தேசிய இன முரண்பாட்டினை தீர்த்து வைப்பதற்கான ஏற்புடைய அரசியல் தீர்வெதற்கும் இவை அடிப்படைத் தேவைகளாக உள்ளன எனக் கருதுகின்றது.

மாநாட்டின் தீர்மானங்களை மாநாட்டுத் தலைவர் வைத்தியக் கலாநிதி சச்சிதானந்தன் வாக்கெடுப்புக்கு விட்டார். தீர்மானங்களுக்கு ஆதரவாக அனைத்து மக்களும் கைகளை உயர்த்தி வாக்களித்தனர். தலைவர் வைத்தியக் கலாநிதி சச்சிதானந்தன் எழுந்து நின்று மாநாட்டுத் தீர்மானம் [illegible] நோக்கி அனைத்து மகாநாட்டுத் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறின என அறிவித்ததும் மக்கள் எழுந்து நின்று விண்ணதிரக் கரகோசம் செய்து மகிழ்ச்சி ஆரவாரம் செய்து தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

அதனை அடுத்து தேசக் கொடி பக்தி மரியாதையுடன் இறக்கப்பட்டு புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம் முழக்கத்துடன் மாநாடு முடிவுற்றது.

### டென்மார்க் அமைதிப் பேரணி

டென்மார்க்கில் உள்ள தமிழர் அமைப்புக்களின் ஒன்றியத்தால் 17.04.99 அன்று ஒழுங்கு செய்யப்பட்டிருந்த அமைதிப் பேரணியில் 2000க்கும் மேற்பட்ட தமிழீழ மக்கள் கலந்து கொண்டனர். டென்மார்க்கின் பாராளுமன்ற முன்றலில் தமிழீழச் சிறுவர்களும் பெரியவர்களும் செம்மணிப் புதைகுழி விடயங்கள், துரையப்பா விளையாட்டரங்கு புதைகுழிகள் போன்ற மனிதப் புதைகுழிகள் [illegible] சிறீலங்காவின் [illegible] டென்மார்க் மக்கள் [illegible] கொண்டனர்.

[illegible]

[illegible]


சாதாரண சமரல்ல
சமர்களுக்கெல்லாம் தாய்ச் சமராக
எமது மண்ணில் நிகழ்ந்த பெரும் சமர்




ஜயசுக்குறுயி
எதிர்ச்சமர்

ஒளிவீழைப்பேழையாய்
வெளிவந்துவிட்டது.

வெளியீடு:
தமிழீழ விடுதலைப் புலிகள்
அனைத்துலகச் செயலகம்

# இன்னுமில்லை எனக்கான நாட்கள்

மீண்டும் இங்கே வசந்தம் விரிந்துளது
பூக்களுக்கு இப்போ பிரச்சினையில்லை.
பிடுங்கலும்,
கடிவெடுக்கடிக்கலும்
வெகுவாக குறைந்துளது.
சில காம்புகழன்று
காணகவிழுவதென்னவோ உண்மைதான்.
அங்கப்பிழையும் மலர்களிலின்றிக்
காவலிலில்லை.
இடையிடையே நாய்பிடிகாரர்
வருவதுன்டெனினும்
பதிவு செய்த நாய்களுக்கு முழுப்பாதுகாப்பு.
அனுமதி பெறாதன மட்டும் அகப்படல்
ஆபத்து
மற்றும்படி எல்லாமே 'நோர்மல்'
வீட்டிலடங்கினால் எந்த விலங்கமும்
இல்லை.
விளக்குச் சுடுமெனில்
விரலையேன் நீட்ட வேண்டும்?
சோலியற்றிருப்பதே சுகமெனில்
எல்லாமே 'நோர்மல்'
இப்போ புற்களும் வேர்பரவிப் பூரித்துள்ளன.
சாமந்திப்பூக்களுக்கே வாழ்வதிகம்
கூடுவிட்டேகிய குருவிகளை வருகவென
எல்லோரும் எழுதுகின்றனர்.
சொல்லுக என் இராஜதெருவே
ஊரின் நாடித்துடிப்பு
உன்னில் ஒழுங்காகத் துடிக்குமென்பதால்
இவர்கள் எழுதுவதனைத்திலும்
எவையெவை சத்தியம்.
எத்தனை காலத்து வாழ்வுன்னில்
அடக்கம்.
எவரெவர் காலடியிலெல்லாம்
கிடந்தனை நீ
முடிபுனைந்த காலத்தும்
கொடிசரிந்த காலத்தும்
வாழ்வறிந்தவள் நீயொருத்தியே
என் இராஜவீதியே!
பொய்ப்புனையா வார்த்தையிற் பேசுக.
வரலாமா நானுன் வாசலுக்கிப்போ?



வந்துன்னை என்னிஷ்டம் போலப்
பிணைய இயலுமா பெரும்தெருவே?
தடுப்பாரின்றித் தழுவமுடியுமா?
'இராமசாமிப்பாரியார்சந்தி' கடந்தப்பால்
நீண்டதோட்டவெளியில்,
நிலாவொளியில்
சாமத்திலும் வந்துன்னில் தவழமுடியுமா?
'ஏய்நில்லு' என்றென்னை
அடக்குவாரின்றி
தாய்மடியுறங்கல் சாத்தியமா?

உண்டெனிற் சொல்லுக என்பிரிய
தெருவே
ஓடிவந்துன்னில் அடைக்கலமாவேன்.
உனக்குத்தான் தெரியுமே
இறக்கை மடித்தோர் கிளையில்
இருத்தல் பிடிக்காது எனக்கு
என் விசால விரிப்புக்கு
இடையூறெதையும்
சகிக்கேன் யான்.
உங்கு என்னாற்
பறக்கமுடியுமா?என்றெழுது
உடன் பாய்ந்து வந்துன்னிற் பரவுவேன்
என்விடுதலை அவாவின் விரிவுனக்குத்
தெரியும்.
என்னை நானேயெழுதும்
பழக்கமுடையேன்.
உயிரசைவின் இறுதிக்கணம் வரை
நானே தான் என்னை எழுதுவேன்
அடங்கிப்போதலென்
அகராதியிலில்லையென
நீ அறிவாய்.
சேவகம் செய்தறியாப் பரம்பரையெனது.
சொல்லுக இப்போ
என்னால் வரஇயலுமா உங்கு?
வந்தாலும் உயிர் தாங்கி வாழ இயலுமா?
நித்தம் தழுவி முத்தமிட்டுக்
கையணைப்பிற் கட்டுண்ட காதலியே!
சொல்லென் ராஜதெருவே.
ஏன் மௌனம் பூசுகிறாய்?
புரிந்தது எனக்கு
இன்னுமில்லை எனக்கான நாட்கள்
சொன்னது சரிதானே.

புதுவை.இரத்தினதுரை.

# களத்தில்




உலகில் எந்தப்பகுதியில் எந்தச் சூழலில், எந்தத் தகுதியுடன் நீங்கள் வாழ்ந்தாலும் தமிழீழத்தில் தான், அந்தத் தாயக பூமியில் தான் உங்களது வேர் ஆழப் புதைந்து கிடக்கிறது. இந்த மண்ணில் தான் உங்களது இனத்துவத்தின் அடையாளம் பதிந்து கிடக்கிறது. இந்த மண் உங்கள் இரத்தத் தோடும், ஆன்மாவோடும், உங்களது வரலாற்றோடும் ஒன்று கலந்து கிடக்கிறது. இத்தாயக தேசம் எதிரியின் ஆதிக்கப் பிடிக்குள் சிக்கி அழிந்து போகாது பாதுகாப்பதில் உங்களுக்கும் பெரும் பங்கு உண்டு. பொறுப்பு உண்டு. கடப்பாடு உண்டு.

தமிழீழத் தேசியத் தலைவர்
மேதகு வே. பிரபாகரன் அவர்கள்


(06.05.1999) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கிவரும் செய்தித்தாள் (185) அன்பளிப்பு : 60 p


# தமிழீழம் சுதந்திரத்தை நோக்கி


LTTE
PO Box 47
7400 Herning
Danmark
13/5/99




# இலண்டனில் எழுச்சிப் பிரகடனம்
# டென்மார்க்கில் அமைதிப் பேரணி

"தமிழீழம் எம் தாயகம், நாம் சுயநிர்ணய உரிமையுள்ள மக்கள்"

"தேசத் தலைவர் பிரபாகரன் தலைமையிலான அரசே எமது அரசு"

"மக்களது நாளாந்த வாழ்வு நிலை திரும்ப சிறிலங்காப்படைகள் உடன் விலக வேண்டும்"

"அரசியல் தீர்வெதற்கும் இவை அடிப்படைத் தேவைகளாக உள்ளன"

டென்மார்க்கிலும் இதே கருத்தை வலியுறுத்தி மக்கள் எழுச்சிப்பேரணி

சிறீலங்கா அரசாங்கத்தின் கொடுமைகளால் பாதிக்கப் பட்டவர்களும் சாட்சிகளுமான புலம்பெயர்ந்து வாழும் தமிழீழ மக்கள் பல்லாயிரக் கணக்கில் ஒன்றுதிரண்டு இலண்டனில் அலெக்சாந்திரியா பலஸின் பிரதான மண்டபத்தில் ஏப்ரல் 25ம் நாள் ஞாயிறு அன்று "தமிழீழம் சுதந்திரத்தை நோக்கி'' என்ற மகாநாட்டையும் டென்மார்க் கொப்பன்ஹேகனில் 17.04.98 ஞாயிறு அன்று அமைதிப் பேரணி ஒன்றையும் நடாத்தினர். இந் நிகழ்வுகளின் மூலம் தமது தேசநேசத்தை தமிழீழத் தேசிய உணர்வாக வெளிப்படுத்தியதுடன், தங்கள் தமிழீழத்தேசமும் மக்களும் தேசத்தலைவன் பிரபாகரன் தலைமையில் சுதந்திரமாக செயற்பட்டு வருவதை தடுத்து சிறிலங்கா ஆக்கிரமிப்பு படைகள் தங்களின் அடிப்படை உரிமையான சுயநிர்ணய உரிமைக்கு எதிராக செய்து வரும் கொடுமைகளை உலகிற்கு எடுத்து விளக்கி மக்களின் நாளாந்த வாழ்வுக்கும் பாதுகாப்பான அமைதிக்கும் சிறிலங்காப் படைகள் வெளியேற வேண்டியதன் அவசியத்தை சர்வதேச சமூகத்திடம் வலியுறுத்தினர். இந்த நிகழ்வுகளின் பொழுது தமிழீழ மக்கள் தங்கள் தேசத்தலைவர் பிரபாகரனின் தலைமையில் தமிழீழ அரசு நோக்கிய அரசு இயங்கி வருவதை உலகிற்குத் தெளிவாக்கி அதற்கான சர்வதேச அங்கீகாரத்தைக் கொடுப்பதன் மூலம் சிறிலங்கா ஆக்கிரமிப்பு படைகள் தமிழீழ மக்கள் மேல் நடாத்தி வரும் மக்கள் மீதான யுத்தத்தையும் மனிதாயத்திற்கு எதிரான கொடுமைகளையும் முடிவுக்கு கொண்டு வர உதவுமாறு பகிரங்க வேண்டிக்கொண்டனர்.

### வரலாற்றுத் திருப்பு முனையாக அமைந்த இலண்டன் மாநாடு

உலகின் பல முக்கிய அரசியல் பொருளாதார தீர்மானங்களை நெறிப் படுத்தும் சர்வதேச நகரமாகத் திகழும் இலண்டனில் தங்களது சர்வதேசப் பிரச்சினையான தமிழீழ மக்கள் பிரச்சினையின் யதார்த்த உண்மைகளை எடுத்துக் கூறி உலகின் மனச்சாட்சியினை உலுப்பி விடும் நோக்கில் "தமிழீழம் சுதந்திரத்தை நோக்கி'' என்ற மாநாட்டை புலம்பெயர் தமிழீழ மக்கள் ஏற்பாடு செய்தனர். தமிழீழம் என்றும் தங்கள் தாயகம். தங்கள் தாயகத்தை சிறிலங்கா அடிமை கொள்ள


(தொடர்ச்சி 6ம் பக்கம்)


## புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

# ஆழமாய் வேரூன்றிய தேசிய இயக்கம்

## விடுதலைப் புலிகளின் 23 வருட பரிணாமம்



**நரதன்**